# நுணுக்குக்காட்டி

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு

1

நுணுக்குக்காட்டி

MICRO SCOPE

MICRO SCOPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டாளர்களே!
நிறுவன உரிமையாளர்களே!
ஆசிரியர்களே! மாணவர்களே!
புதுமனை புகுவோரே!
புதுமணம் கொள்வோரே!

உங்கள் கவலை என்ன?

இதோ அச்சிடும் கலையின் முன்னோடிகள்
உங்கள் எண்ணம் போல் அச்சிட
அச்சிடும் கலையில் மெச்சிடும் சேவை!

வேறெங்குமல்ல
இதோ



மாறன் பதிப்பகம்
664, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

# நுணுக்குக்காட்டி

தொகுதி - 1
புரட்டாதி 1995

*தமிழ் மக்களின் அரசியல், போராட்ட, வரலாற்று நிகழ்வுகள் - அவை பற்றிய பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் என்பவற்றை, இந்த மாத வெளியீடு பதிவுசெய்ய முனைகிறது.*

*இதனூடாக வரலாறு ஒரு விதத்தில் ஆவணப்படுத்தப்படுகின்றது-*

*அரசியல் அறிவை வளர்க்க விரும்பும் மாணவர், இளைஞர், பொதுமக்கள் ஆகியோருக்கு இலகு உசாத்துணை கிடைக்கிறது.*

*எமது இந்தப் புதிய வெளியீட்டைச் செழுமைப்படுத்துவதற்கு, வாசகரிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.*

*எழுதுங்கள் ...*

தமிழ்த்தாய்
வெளியீட்டகம்

விலை : ரூபா 15/-

இலக். 664, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ''பிரபாகரனைப் பாராட்டும் முறையில் நான் ஒன்றைக் கூறவேண்டும். இன்று அவர் பலரின் வீரன். பல தசாப்தங்களாக நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள் இன்று எழுந்து நிற்கிறார்கள். எப்படிப் போரிடுவது? எப்படி மடிவது என்று பிரபாகரன் சிங்களவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.''

- சுசில் முனசிங்க
(ஐ. தே. கட்சி நா. உ.)
21.5.1995 'ஐலண்ட்'
செவ்வியில்.



❋ ''விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இராணுவத்திற்கும், அரசியல் துறைக்கும் பிரபாகரன் ஒருவரே பொறுப்பாக உள்ளார். இராணுவமும் அரசியலும் ஒன்றுடன் இன்னொன்று கைகோத்தபடி முன்னோக்கிச் செல்கிறது. அவர் இராணுவ சமிக்ஞை காட்ட விரும்பினால், நாம் இழப்புக்களைப் பற்றிப் பேசவேண்டியதாகிறது.

...விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தரமான இயக்கக் கட்டுக்கோப்புடன், திறமையான திட்டங்களுடன், போதுமான பயிற்சிகளுடன், சிறந்த தலைமைத்துவத்துடன் இருக்கின்றனர்.''

- மேஜர் ஜெனரல் தஹநாயக்கா
(முன்னாள் இராணுவ அதிகாரி)
'சண்டே லீடர்' செவ்வியில்

❋ '' யுத்தத்தின்மூலம் சமாதானத்தை அடைவதே அரசின் உறுதியான நோக்கம். அதற்காக. எனது அமைச்சர் சீருடையைக் கழற்றி எறிந்துவிட்டு போர்ச் சீருடையை அணியவும் நான் தயார். நாட்டின் பிரதான இனத்தின் உரிமையைப் பாதுகாக்க நாங்கள் எல்லாரும் கைகோப்போம்.''

- அனுருத்த ரத்வத்த
'சரிநிகர்' - மே 18 - மே 31, 1995

❋ பொட்டு வைத்துக்கொண்டு நின்ற சிங்கள வாலிபர் ஒருவரை தமிழர் என்று நினைத்த மற்றொரு சிங்களவர் தாக்கத் தொடங்கினாராம்.



இச்சம்பவம் கம்பளை நகரில் நடைபெற்றது. இந்து ஆலயத்தில் நடந்த பூசையில் கலந்துகொண்ட பிரஸ்தாப இளைஞர், நெற்றியிலே குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு ஆலயத்திலிருந்து வெளியே சென்று, நகரில் உள்ள தமிழ்க்கடை ஒன்றின் முன்பாக நின்றிருந்தார். அதனை அவதானித்த மற்றொரு சிங்கள வாலிபர் அந்த இளைஞரை நெருங்கிச் சென்று, '' நீங்கள் எல்லாம் புலிகள்; உங்களை விட்டுவைக்கக்கூடாது '' என்று கூறியபடி அவரைத் தாக்கத் தொடங்கினார்.

பின்னர் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தலையிட்டு, 'அவர் தமிழர் அல்ல; சிங்களவர்' என்று கூறியதால் அவர் உயிர் பிழைத்தார்.

- செய்தி
'உதயன்' 22. 06. 1995

❋ ''இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, சராசரித் தமிழருக்கு அப்படியொரு பிரச்சினையில்லை. இப்படிப்பட்டதொரு பிரச்சினை தமிழ் உயர்குழாத்தினராலும், அவர்களது கூட்டாளிகளான ஸ்கண்டிநேவிய - அங்லோ சாக்சன் தொடர்புடைய தொண்டர் நிறுவனங்களினாலும்தான் 'சிருஸ்டிக்கப்'பட்டிருக்கிறது.''

- பேராசிரியர் நளின் டி. சில்வா
'ஐலண்ட்' - 18. 06. 1995

❋ ''நடைபெற்றுவரும் யுத்தத்தில் ஏற்பட்ட பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் உயிர்ப்பலி வீண்போகாது.

இந்த உயிர்ப்பலிகள் நியாயமான சமாதானம் என்ற வெகுமதியைத் தந்தே தீரும்.''

- ஆசிய கிறீஸ்தவ மாநாடு
(யாழ்ப்பாண கிறீஸ்தவ சகோதர சகோதரிகளுக்கு எழுதிய சிறப்புக் கடிதத்தில்)
'உதயன்' - 06.07.1995

❋ ''விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன்மூலம் சமாதானமாக வாழ்வது என்னும் பெரும்பான்மை இனத்தவரின் முடிவு நடைமுறைப் படுத்தப்படும்.''

- அனுருத்த ரத்வத்தை
(நாடாளுமன்ற விவாதத்தில்)
'ஈழநாதம்' - 09.06.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ''சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன எனக் கூறிவந்த ஜனாதிபதி தற்போது, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால்தான் பேச்சுக்கள் என்று கூறியுள்ளார்.

கடந்தகால அரசின் பாணியில் அவர் இவ்வாறு கூறியதன் மூலம் சமாதான முயற்சிகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.''

- வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்
'உதயன்' - 12.06.1995



❋ ''நானும் ஒரு இராணுவ அதிகாரியாக இருந்தவன்' புலிக்கு அடிப்பது எப்படி என்பது எனக்குத் தெரியும்.''

- அனுருத்த ரத்வத்தை
'ஈழநாதம்' - 06.06.1995

❋ ''கிழக்குப் பிரதேசத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றுவதற்காகப் படையினர் தமிழ்ப் பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

...சமாதானத்தை விரும்பிய மக்களுக்கு துரோகம் இழைக்கக்கூடாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல; அவர்களது பிரச்சினை அரசியல் பிரச்சினை என்பதனை மறந்து செயற்படக்கூடாது.''

- யோசப் பரராஜசிங்கம்
(நாடாளுமன்றத்தில்)
'உதயன்' - 12.06.1995

❋ ''இன்று வடக்கில் 90%மும் கிழக்கில் 70%மும் மறுபுறம் கடற்படை, பொலிஸ், சிவில் நிர்வாகம், தனியான சட்டத்துறை இப்படிப் பல்வேறு வழிகளிலும் பலம்வாய்ந்திருக்கும் புலிகள், ஆகாயப்படையையும் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப் பலம்வாய்ந்திருக்கும் புலிகளின் நிர்வாகம் ஒரு பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும்போது சமஷ்டித் தீர்வைப் புலிகள் ஏற்பார்கள் என்று சொல்ல முடியாது.

இனியும் ஒரு பேச்சுவார்த்தை நடக்குமா என்றுகூட நம்ப முடியாது. இந்த சமஷ்டிக்கு மேலாக (confedaration) ஒரு நாட்டோடு செய்துகொள்வதைப் போன்று ஒப்பந்தம் செய்துகொண்டு. பின்பு இரண்டு நாடுகளும் இணைந்து ஒரு தலைமையின் கீழ் இயங்குவதைப்போன்று ஒரு முறையே இதற்குச் சரியான தீர்வாக அமையுமென்று நான் கருதுகிறேன். இதற்குக் குறைந்தபட்சத் தீர்வொன்றுக்கு புலிகள் ஒருபோதும் வரக்கூடியதற்கான வாய்ப்பு மிகவும் குறைவானதே ''

- குமார் பொன்னம்பலம்
(நேர்காணலில்)
'தினகரன்' 11.06.1995



❋ ''சிறீலங்காவின் வளர்ச்சியைத் தீர்மானிப்பவராக எண்பதுகளில் பிரபாகரன் இருந்தார்: தொண்ணூறுகளிலும் அவ்வாறானவராகவே இருப்பார். இந்நாட்டின் வரலாறு எழுதப்படும்போது, இந்நூற்றாண்டின் மிக முக்கிய இலங்கையராக அவர் குறிப்பிடப்படுவார்.''

- தயான் ஜயதிலக்க
('சிறீலங்கா: ஜனநாயகத்தின் பிரசவ வேதனை, முடிவில்லா யுத்தம் நீண்ட நெருக்கடி' என்ற ஆங்கில நூலில்)

❋ ''...யாழ்ப்பாணத்தில் பாடசாலைச் சிறுவர்களிலிருந்து முதியோர்வரை எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளுக்கிணங்கி தமது முழுப் பங்களிப்புக்களை வழங்கும்போது, தென்னிலங்கை மக்கள் இந்த யுத்தத்தை வெற்றிகொள்ள ஏன் நமது பங்களிப்புக்களை வழங்கமுடியாது?''

- மஹிந்த யாப்பா அபேவர்த்தன
(தென் மாகாண முதலமைச்சர்)
'வீரகேசரி' - 26.06.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✻ '' ...புலிகளுடன் பேச்சு நடத்தும் அதேவேளை, புலிகளையும் தமிழர்களையும் பிரிக்கும் இரட்டைவேட முயற்சியில் சந்திரிகா அரசு ஈடுபட்டது.

...சிங்கள தேசத்தில் வாழும் சிறுபான்மை இனமே தமிழர்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே அரசின் சித்தாந்தம் அமைந்துள்ளது.

ஆனால் உண்மை வேறாக உள்ளது.

சிங்களவர் தேசம், தமிழர் தேசம் ஆகிய இரண்டையும் கொண்டதாகவே சிறீலங்காவின் சரித்திரம் மலர்ந்து வந்திருக்கின்றது.

...தமிழர் தேசம்மீது தான் விரும்பும் தீர்வு ஒன்றை தெற்கில் உள்ள அரசு பலவந்தமாகத் திணிக்க முடியும் என எண்ணுவது முட்டாள்தனமாகும்.

நிர்ப்பந்தம் ஏதுமின்றி - சுயமாக செய்யப்படும் - ஓர் உடன்பாட்டின்மூலம் மட்டுமே தீர்வை எட்ட முடியும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் - மறுக்கப்படமுடியாத - தலைவர்கள் விடுதலைப் புலிகளே என்பதை ஏற்றுக்கொள்வதன் மூலமே, இத்தகைய உடன்பாட்டை எட்ட முடியும். நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உண்மை இதுதான்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே என்ற அடிப்படையில் புலிகளுடன் இணங்கிப்போவதே ஆக்கபூர்வமான முன்னேற்றத்துக்கு ஒரே வழியாகும். ஏனெனில் புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள பயங்கர நிலையிலிருந்து மீள்வதற்கு - யுத்தத்தை நிறுத்தி, மீண்டும் சமாதானப் பாதையில் இறங்கும்படி அரசைத் தூண்டுவதே ஒரே வழியாகும்.



ஆனால் இம்முறை பேச்சுவார்த்தையின் மெய்ப்பொருள், விசுவாசமானதாகவும், நடைமுறைச் சாத்தியமான தீர்வை நோக்கியதாகவும் இருக்கவேண்டும்.

சந்தர்ப்பவசமாக-

எதிர்கால 'சிறீலங்கா - ஈழம் குடியரசின் கூட்டாட்சிக்கு' (Federal Union of the Republic of Sri Lanka and Eelam) அல்லது 'சிறீலங்கா - ஈழம் ஐக்கிய நாடுகளுக்கு' (United States of Sri Lanka and Eelam) ஆரம்ப நிலையாக அது இருக்கக்கூடும்.''

- ம. வசந்தராஜா

(முன்னாள் தலைவர் - 'ரூபவாஹினி')

'சண்டே ஒப்சேவர்' - 25.06.1995)

✻ ''கத்தோலிக்க திருச்சபை தமிழ் மக்களின் வளர்ச்சியில் - போராட்டத்தில் - என்றும் இரண்டறக் கலந்து செயற்பட்டு வருகிறது. கத்தோலிக்கத் திருச்சபையை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கும் நோக்குடனேயே அரசு இந்தச் செய்தியை (வடபகுதிக் கத்தோலிக்க மக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து ஊர்வலம் நடாத்தியதாக - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய செய்தி) வெளியிட்டதாக நாம் கருதுகிறோம்.

- அருட் திரு. சி. ஜி. நேசகுமார்

✻ ''விடுதலைப் புலிகள்தான் இந்த யுத்தத்தை ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அடிப்படை உண்மை அது வல்ல. இந்த யுத்தத்தை ஒரு பரந்த பின்னணியில் நாம் பார்க்கவேண்டும். யுத்தத்தினால் பயனும் பலமும் பெறும் சக்திகள் ஏராளம் உள்ளன.....

விடுதலைப் புலிகளைச் சமாதானத்திற்குக் கொண்டு வருவது பற்றியே எல்லாரும் பேசுகிறார்கள். படையினரைச் சமாதானத்திற்குக் கொண்டுவருவது பற்றி எவருமே பேசுவதில்லை. இதுதான் இன்றுள்ள பிரச்சினை.''

- கலாநிதி சுனில் விஜய சிறிவர்த்தனா

('விபவி' கலாசார மைய ஒருங்கிணைப்பாளர்)

'ஈழநாடு' - 06. 07. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''இந்த நடவடிக்கை ('முன்னோக்கிப் பாய்தல்') நிரந்தரமான மனித அவலங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். கோவில்களும் தேவாலயங்களும் உள்ள பகுதிகளிலும், குடிமக்கள் நெருங்கி வாழும் பகுதிகள் மீதும், கண்மூடித்தனமான முறையில் விமானக் குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றின் விளைவாக பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் முன்னூறு பேர் - சில சமயங்களில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் உட்பட - உயிரிழந்து இருப்பதுடன், சுமார் 500 இற்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் சுமார் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதுடன், சுகாதார, மருத்துவ வசதிகளும் உணவுப் பொருட்களும் அற்ற நிலையில் துன்பப்படவேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

...இந்த நிலையில் தற்போதைய யுத்தமானது சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்காகவுமே மேற்கொள்ளப்படுகிறதென, அண்மையில், மதிப்பிற்குரிய ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கை முற்றிலும் அர்த்தமற்ற ஒன்றாகும் எனச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறோம். மக்களை விடுவிப்பது என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை மக்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.''

- யாழ். பிரஜைகள் குழு
( ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலிருந்து )



'' ...சிங்கள இனத்துக்கு இருக்கின்ற ஒரேயொரு அரசு இலங்கை மட்டுமே என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். எங்களுக்குப் பின்னோக்கிச் செல்லமுடியாது. சுற்றிலும் இருப்பது பெரிய சமுத்திரம். அதற்கப்பால் இருப்பது அந்தாட்டிக்கா. இன்று பிரபாகரன் ஆரம்பித்திருப்பது சிங்கள மக்களை சமுத்திரத்திற்குள் தள்ளிவிடும் யுத்தம் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.''

- தயான் ஜயதிலக்க
( ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் மாகாண சபையில் அமைச்சராக இருந்தவர் )
'லங்காதீப' நேர்காணலில்.

''...இலங்கையில் நடைபெறும் இனவாதப் போருக்கு தனித் தமிழீழமே தீர்வாகும். இதைப் புரிந்துகொள்ளாதவர்களே இந்தியாவிலுள்ள தமிழர்கள் மத்தியில் நாம் பிரிவினையைத் தூண்டுவதாகக் குற்றம்சாட்டுகின்றனர். இந்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றே விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை சிறீலங்கா அரசாங்கம் எடுத்துள்ளது.

எனவே, நூற்றுக்கணக்கான தமிழர்கள் பலியானதற்கும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்ததற்கும், இலட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்ததற்கும் இந்தியாவுக்கும் பொறுப்பு உள்ளது. இலங்கைத் தமிழர்களை நரசிம்மராவின் ஆட்சி காட்டிக்கொடுத்துள்ளது.''

- வை. கோபாலசாமி
( சென்னையிலுள்ள சிறீலங்கா உதவித் தூதரகத்தின் முன்னால், 14. 07. 1995 இல் நடைபெற்ற கூட்டத்தில் )

'' சிறீலங்காப் படையினர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளும் இராணுவ அட்டூழியங்களினாலேயே சிறுவர்களும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

...' மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் குழு ' இதுபற்றி வெளியிட்ட கருத்துக்கள் ஏற்கப்பட முடியாதவை. இவர்கள் கடந்த பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திற்கே செல்லாதவர்கள். யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியாது. கொழும்புக்கு வருபவர்களின் வாய்மூலத்தரவுகளைப் பெற்று மட்டும் இவர்கள் அறிக்கை தயாரிக்கின்றனர். ''

- அமால் ஜயசிங்க
( ஏ.எஃவ்.பி.செய்தியாளர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✲ '' சாத்வீகப் போராட்டம் தோல்வியுற்ற நிலையில் தமிழர் போராட்டத்திற்கு இப்போது, பிரபாகரன் தலைமை தாங்குகிறார்.

...தமிழரின் மானம் காக்க பிரபாகரன் அவசியம் என்பதைத்தான் நான் அங்கு ( தமிழ் நாட்டில் ) உணர்த்தியிருந்தேன்.''

- அமைச்சர் தொண்டமான்
( பி.பி.சி.செவ்வியில்
- 30.05.1995)



✲ '' ... இலங்கைத் தீவில் தமிழர்கள் தங்கள் தேசிய இன உரிமையைக் காக்க நடாத்துகின்ற சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கவேண்டியது, உலகெங்குமுள்ள தமிழர்களின் கடமையாகும்.

...இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களின் போராட்டத்தையும் அதனை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பது எந்தவிதத்திலும் தவறு அல்ல.''

- வை. கோபாலசாமி
( பி. பி. சி.செவ்வியில் - 06. 07. 1995 )

✲ '' ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க, எத்தகைய தியாகத்திற்கும் ' மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ' தன்னை ஆட்படுத்திக்கொள்ளும். ஈழத் தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தனித் தமிழீழமே தீர்வாகும் என்பதை, திட்டவட்டமாக மறுமலர்ச்சி தி.மு.க. இம்மாநாட்டின்மூலம் பிரகடனம் செய்கிறது.''

- மறுமலர்ச்சி தி.மு.கவின் முதலாவது
மாநில மாநாட்டுத் தீர்மானம்.

✲ '' ... விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பதாகக் கூறிக்கொண்டு கண்மூடித்தனமான ஷெல்,



விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதை ஆட்சேபிக்கிறோம்.

... பொதுமக்கள் தஞ்சம் அடைந்த தேவாலயம் 'ஒன்றின்மீது விமானப் படையினர் நடாத்திய குண்டுவீச்சினால் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, ஏனைய பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் எல்லாம் இலட்சக்கணக்கான அகதிகளால் நிரம்பி வழிகின்றன.''

- யாழ். பல்கலைக்கழக அமைப்புகள்
(ஜனாதிபதிக்கு அனுப்பிய அறிக்கையில்)

✲ ' நவாலியில் தேவாலயப் பகுதி மீது சிறீலங்கா அரசுப் படைகள் குண்டுவீச்சுத் தாக்குதல் எதனையும் நடாத்தவில்லை' என சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்திருக்கிறார்.

'' இராணுவ நடவடிக்கை நடைபெறும் பகுதியில் அந்தத் தேவாலயம் இல்லை; அதனால் அது தாக்கப்படவில்லை என நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன் '' என அவர் கூறினார்.

- நெதர்லாந்து வானொலியில்
கொழும்புச் செய்தியாளர்
' றீற்றா செபஸ்ரியன் '

✲ '' நவாலியில் சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது நடாத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல் கொடூரமான செயல் என செய்தியாளர்கள் பலர் வர்ணித்திருக்கின்றனர். வேண்டுமென்றே திட்டமிட்டு நடாத்தப்பட்ட கொடுமை இதுவென மனித உரிமைக் கழகங்கள் யாவும் விமர்சித்துள்ளன.''

- வெரித்தாஸ் வானொலி
11. 06. 1995

✲ '' இலங்கையில் கடந்த இரு நாட்களாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளன. இலங்கை அரசு முன்னெடுத்துள்ள தற்போதைய இராணுவ நடவடிக்கைகள், 12 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வரும் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்வைத்தரப்போவதில்லை. எனவே சிறீலங்கா அரசு அமைதிக்கான தீர்வைத் தேடும் முயற்சியில் தீவிரமாக இறங்கவேண்டும்.''

- றேமன் சாள்ஸ்
( கனடிய வெளிவிவகார அமைச்சர் )
' வெரித்தாஸ் ' - 11 07. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ ''ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் ஆகிய கட்சிகள் பலவருட காலங்களாக, பல்வேறு அரசாங்கங்களின் கீழ், கூலிப்படைகளாக இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து இயங்கி வந்துள்ளன.''

- குமார் பொன்னம்பலம்
'ஹிந்து' (சென்னை)



✻ ''கடந்த 9ஆம் திகதி, வடக்கு நகரான யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பெரும் அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை சிறீலங்கா ஆயுதப் படைகள் ஆரம்பித்தன.

கடுமையான பீரங்கித் தாக்குதல், வான் தாக்குதல்களைக் கொண்ட இந்த நடவடிக்கை, உடனடியாக பத்தாயிரக் கணக்குகளில் சிவிலியன்களை அப்பிரதேசங்களை விட்டு வெளியேற வைத்தது.

இடம்பெயர்ந்தவர்களில் அதிகமானோர் கோயில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். அந்த வகையில் நவாலியில் உள்ள சென்பீற்றர்ஸ் தேவாலயத்திலும் பல நூற்றுக்கணக்கானோர் தஞ்சம் புகுந்தனர். நேரடியாகப் பார்த்தவர்கள் கூறிய தகவல்களின்படி

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு இந்தத் தேவாலயமும் சூழவுள்ள கட்டடங்களும் விமானப் படையின் தாக்குதல்களுக்கு இலக்காகின. இந்தத் தாக்குதல்களில் பெண்கள் குழந்தைகள் உட்பட 65 பேர் கொல்லப்பட்டதுடன் 150 பேர் காயமுற்றனர்.

தாக்குதல் நடந்த இடத்துக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் அடுத்த நாள் காலையில் நேரடியாகச் சென்று, பெருமளவில் ஏற்பட்டுள்ள சேதங்



களைக் குறித்துக்கொண்டதுடன், அவலத்தையும் மதிப்பீடு செய்தனர். பெரும்பாலான சடலங்கள் இடிபாடுகளுக்கிடையில் இருந்து இன்னும் மீட்கப்படவில்லை.''

- செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு
(ஜெனீவாவில் - தலைமையகம் விடுத்த அறிக்கையில்)

✻ யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா அரசபடையினர் மேற்கொண்டுள்ள இராணுவத் தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு கோரி, சென்னையில் நேற்று, இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ம.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கட்சியின் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தலைமையில் தொண்டர்கள் சுமார் 2,000 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்,

- செய்தி
'உதயன்' - 15. 07. 1995

✻ பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானில் தனது தினசரி பிரசங்கமொன்றில், அரசு தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதை நிறுத்தவேண்டுமெனவும் - யாழ்ப்பாணத்தில் தேவாலயம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து தான் வருந்துவதாகவும் கூறியுள்ளார்.

- செய்தி
'உதயன்'
- 16. 07. 1995

✻ யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா அரசு நடாத்தும் படுகொலைகளைக் கண்டித்து ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், பிரிட்டன் போன்ற நாடுகளின் தலை நகர்களில் நேற்றும் நேற்று முன்தினமும் கண்டனப் பேரணிகளைத் தமிழ் மக்கள் நடாத்தியுள்ளனர். அரசின் இப் படுகொலை நடவடிக்கைகளையும். மக்கள் குடியிருப்புக்களை விமானக் குண்டுவீச்சுக்கள்மூலம் அழிப்பதையும் கண்டிக்குமாறு சுவீடன், நோர்வே, ஆஸ்திரேலியா பிரிட்டன் அரசுகளிடம் பேரணியில் கலந்துகொண்டமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

- செய்தி
'உதயன்' - 16. 07. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ '' தற்போதைய யுத்தம் தங்களை மீட்பதற்கான ஒன்று என வடபகுதி மக்கள் கருதுவார்களெனக் கொள்ள முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளைக் கைவிட்டு சிங்களப் படையை ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் கோருவதை, அவர்கள் ஏற்க மாட்டார்கள். குறிப்பாக, யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதனை ஏற்க மாட்டார்கள்.



... இந்நிலையில் ' தற்போதைய நடவடிக்கை தங்களுக்கெதிரான ஆக்கிரமிப்பல்ல; தங்களை மீட்பதற்கான நடவடிக்கையே என அவர்கள் கருதமாட்டார்கள்,

இதனால், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் மேன்மேலும் புலிகள் பக்கம் சாய்வதைத் தடுக்கமுடியாது.''

- விக்ரர் ஐவன்
( ' ராவய ' ஆசிரியர் )
பி. பி. சி. செவ்வியில்

❀ '' முன்னேறிய இராணுவத்தினர் மீது மேலும் சில அதிரடித் தாக்குதல்களை அடுத்த சில நாட்களில் எதிர்பார்க்கலாம். படையினரை தமது பிரதேசங்களுக்குள் நன்கு முன்னேற அனுமதித்துவிட்டு, அவர்களைப் பல்வேறு முனைகளினாலும் அதிரடித் தாக்குதல் நடாத்தி அழிப்பதே புலிகளின் உத்தியாக உள்ளது என்பது இப்போது புலனாகியுள்ளது. ''

- அமால் ஜெயசிங்க
( ஏ. எஃவ். பி. செய்தியாளர் )

❀ பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் இல்லத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற இலங்கை அரசுக்கு எதிரான



ஆர்ப்பாட்டத்தில், ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பிரிட்டனில் உள்ள சுமார் நூறு தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பான ' சர்வதேச தமிழ் சம்மேளனம் ' இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

- செய்தி
' உதயன் ' - 16. 07. 1995

❀ யாழ். குடாநாட்டின் மீது சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள படையெடுப்பைக் கண்டித்து, ஆஸ்திரேலியாவில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று கடந்த சனிக்கிழமை நடந்தது நான்காயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் புலிக்கொடிகளை ஏந்தியவாறு, '' எமது தலைவர் பிரபாகரன் '', என்றுகோஷமிட்டவாறு ஊர்வலத்தில் சென்றனர்.

- செய்தி
' உதயன் ' 18. 07. 1995

❀ '' முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கைமூலம் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து துருப்புக்கள் வாபஸ் பெறப்படவில்லை.

உத்தி அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதேதவிர, கைப்பற்றிய நிலைகளை நாம் விட்டுவிடவில்லை ( பிழை ). கைப்பற்றிய பிரதேசங்களில் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை தொடர்கின்றது.''

- பிரிகேடியர் சரத் முனசிங்க
' உதயன் ' - 18. 07.1995

❀ பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி ஆரம்பிக்கவிருந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்போடப்பட்டுள்ளன.

தற்போது வடக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் முற்றுப்பெறும்வரை அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில்லை என, ஐ.தே. க. முடிவு செய்துள்ளது.

- செய்தி
' உதயன் ' - 18.07.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ '' விடுதலைப் புலிகளைச் சிறீலங்கா இராணுவம் பலவீனப் படுத்தினால், அதன் பின்னர் அரசியல் ரீதியாக தமிழ் மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடைக்குமென நான் நினைக்கவில்லை. இன்று விடுதலைப் புலிகளைத் தாக்குபவர்கள் நாளை நிச்சயமாக தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடாத்துவர்.''

- குமார் பொன்னம்பலம்
('பி. பி. சி.' சிங்கள சேவையில் )



✻ இராணுவம் முதல் தடவையாக மீனவர்களையும் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தியுள்ளது. இதற்காக 135 மீனவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு களுத்துறையில் உள்ள பூஸா முகாமிலும் அனுராதபுரத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெற்றுவரும் வடக்கு - கிழக்குப் பகுதியில் சேவையில் அமர்த்தப்படவுள்ள இந்த மீனவர்கள், பாதுகாப்புக் கடமைகளுடன் படையினருக்கான மீனையும் பிடிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

- செய்தி
' உதயன் ' - 18.07.1995

✻ ''விடுதலைப் புலிகளுக்கு வடக்கு- கிழக்கு தமிழ்மக்களின் ஆதரவு அமோகமாக உண்டு. இந்நிலையில் சிறீலங்கா அரசு ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சமரசப் பேச்சுக்களை நடாத்துவதில் பயனில்லை. விடுதலைப் புலிகளை நிராகரித்து இத்தகைய சமரசத் திட்டங்களை அரசுமுன்வைத்துப் பேச முடியாது. ''

- பேராசிரியர் ஸி.டி. முனி
(' தூரதர்ஷன் ' செவ்வியில்)
ஈழநாதம் - 06. 07. 1995

✻ '' சகல தமிழர்களையும் சந்தேகத்துடன் பார்க்கும் நிலைமை இன்று இங்கு உருவாகியுள்ளது. இங்கு வந்த கனடியப் பிரஜைகள் சிலர்கூட விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை மாறவேண்டும். இங்கு வாழும் சகல இன மக்களும் உரிமையுடன் வாழும் அமைப்பு முறை, அரசியல் அமைப்புமூலமும் சமாதானப் பேச்சுக்களின் மூலமும் ஏற்பட வேண்டும்.

... இலங்கை மக்கள் மத்தியில் இன்று உருவாகியுள்ள பிரச்சினைகளின் அடிப்படைக் காரணம் இனங்களிடையேயான சமத்துவமின்மையே.''

- ரேமொன்ட் ஷான்
( கனடிய வெளியுறவு இணை அமைச்சர் - கொழும்பில் )
' வீரகேசரி - 03. 06. 1995

✻ '' 09. 07. 1995 ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய ' ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தல்'லில், ஏறக்குறைய பத்தாயிரம் விசேட பயிற்சி பெற்ற படையினர் - நன்கு ஆயுதமயப்படுத்தப்பட்ட நிலையில் பங்கு கொண்டனர்.

...இதுவரை 239 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயப்படுத்தப்பட்ட ஆயிரமளவான ஆட்களில் ஏராளமானோர் அங்கவீனமாக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரபூர்வ அறிக்கைகள் கூறுகின்றன.

...14. 07. 1995 அன்று அதிகாலை, புலிவீரர்கள் ஒரு பெருந் தாக்குதலைத் தொடுத்தனர். தலைவரின் நேரடி நெறிப் படுத்தலில் நடந்த இந்தப் பதில் இராணுவ நடவடிக்கைக்கு ' புலிப்பாய்ச்சல் ' எனத் தலைவரே பெயர் சூட்டினார்.

...நூற்றிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன் தரைப்படைக்குத் துணையாகக் குண்டு வீச்சில் ஈடுபட்டபடி - சிங்களச் சிப்பாய்களின் போரிடும் உறுதியை ஊக்குவித்துக் கொண்டிருந்த ' புக்காரா ' குண்டு வீச்சு விமானம் அவர்களின் கண்முன்னாலேயே சுட்டு வீழ்த்தப்பட்டதால், சிங்களப் படைகளின் நம்பிக்கையும் சிதறிப் போனது.

... ' எடித்தரா ' என்ற கட்டளைக் கப்பல், காங்கேசன் துறை துறைமுகத்தில் வைத்து, 16. 07. 1995 அன்று அதிகாலை, கரும்புலித் தாக்குதல் மூலம் மூழ்கடிக்கப்பட்டது. ''

- விடுதலைப் புலிகள்
ஆடி 1995





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✽ ''புலிகளின் தலைமையுடன் நம்பிக்கையையும் பொறுப்பையும் வளர்த்து 'பொதுவான தளத்தை'க் காண்பதற்கு நேர்மையான முயற்சிகளைச் செய்வதற்குப் பதிலாக, வேறொரு மூலோபாயத்தினால், விலகிய பாதையில் அரசாங்கம் சென்றது; ஏனெனில், புலிகளின் தலைமையைத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தினால் - இராணுவத்தினால் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என்பதால். உண்மையில் இது புதியதோர் மூலோபாயம் அல்ல; இராணுவக் கட்டமைப்பும், பெரும்பாலான சிங்களப் புத்திஜீவிகளும், இடதுசாரி அரசியல் வாதிகளும், புலிகளை எதிர்க்கும் சில தமிழ்க் குழுக்களும் ஏற்கெனவே இதைச் சொல்லி வருகின்றனர்.''

- ம. வசந்தராஜா
( 'ரூபவாஹினி'யின் முன்னாள் தலைவர் )
'சண்டே ஒப்சேவர்' - 25. 06. 1995

✽ ''விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டுதல் என்ற போர்வையில் நடைபெறும் தமிழர்கள் மீதான இனவாத நடவடிக்கையை, பிரிட்டனில் வாழும் தமிழ் மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் உங்கள் ஆதரவும் அவசர நடவடிக்கையும் தேவைப்படுகின்றன.

... பொஸ்னிய முஸ்லிம்களும் செச்சினியர்களும் எதிர்நோக்குவதைப் போன்று, தமிழ்ப் பொதுமக்களும் மீண்டும் இனரீதியில் வதை செய்யப்படுகிறார்கள்.''

- ஐக்கிய இராச்சிய தமிழ் நடவடிக்கைக் குழு
(பிரித்தானியப் பிரதமர் ஜோன்மேஜருக்கு எழுதியகடிதத்தில்)

✽ '' முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை, கூடிய செலவுடன் செய்யப்பட்டு மிகக்குறைந்த பயனைத் தந்த நடவடிக்கை.''

- சண்டே ரைம்சின் இராணுவ ஆய்வாளர்
'சண்டே ரைம்ஸ்' - 16. 07. 1995



✽ ''சிங்களவரின் நாட்டிலுள்ள சிறுபான்மை இனம்தான் தமிழர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே, அரசாங்கத்தின் 'கருத்துநிலை' (Sdeology) உள்ளது எப்படியாயினும் உண்மை வேறுவிதமானது. சிங்களவர், தமிழர் என்ற இரண்டு பிரதான தேசிய இனங்களைக் கொண்ட சமூகம், இலங்கையில் வரலாற்று ரீதியாக வளர்ந்துள்ளது. சிங்களத் தேசிய இனத்துடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் தமிழ்த் தேசிய இனம் சிறியதானாலும், நெருங்கிய தொடர்புகளுடனும், தனது விசேடமான தனி அடையாளத்தைத் தக்கவைத்துக் கொண்டே சிங்களத் தேசிய இனத்துடன் 'பக்கம் பக்கமாக' வளர்ந்து வந்துள்ளது. அத்துடன், நீண்ட வரலாற்றுக் காலகட்டங்களூடாக, தெளிவாக அடையாளங்காணக்கூடிய 'தமிழர் தாயகமும்' உருவாகியுள்ளது.''

- ம. வசந்தராஜா
' சண்டே ஒப்சேவர் ' 25. 06. 1995

✽ '' தமிழர் இரத்தத்தில் உங்கள் கரங்களைத் தோய்த்து எடுக்காதீர்கள்; அது உங்களுடன் நிரந்தரமாகத் தங்கிவிடும்.''

- ஐக்கிய இராச்சிய தமிழ் நடவடிக்கைக் குழு
( சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் )

✽ நிருபர்: பெருமளவிலான புலிகள் பார்வையில் படாது எப்படி ( புலிப்பாய்ச்சலில் ) உள் நுழைந்தார்கள்?

பதில் : அவர்கள் இருட்டில் தவழ்ந்து வந்து படையினரின் பாதுகாப்பு நிலைகளுக்குள் ஊடுருவினார்கள்.

நிருபர் : தாக்குதலில் எவ்வளவு பேர் ஈடுபட்டனர்?

பதில் : 600 பேருக்கு மேல்.

நிருபர் : அன்று இரவு பௌர்ணமியல்லவா?

பதில் : அங்கேயும் பௌர்ணமியா? எந்த நேரத்திலிருந்து எதுவரை என்பதில் அது தங்கியிருக்கிறது. அமைக்கப்பட்ட பகுதிகளில் 10 - 15 யாருககப் பால் பார்ப்பது கடினம்; தெளிவாகப் பார்க்க முடியாது.

- இராணுவப் பேச்சாளர்
பிரிகேடியர் சரத் முனசிங்க
( செய்தியாளர் மாநாட்டில் )
' ஐலண்ட் ' - 16. 07. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ''முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தது எனக்குத் தெரியவே தெரியாது யாழ். நகரிலும் ஷெல்கள் வந்து விழுகின்றனவா?''

- சந்திரிகா குமாரதுங்க
(தென்னிந்தியத் திருச்சபை யாழ். பேராயர் அதிவணக்கத்துக்குரிய எஸ். ஜெபநேசனிடம்)
'உதயன்' - 25. 07. 1995



❋ ''முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் விடுதலைப் புலிகளை அழிப்பதாக இருந்தபோதிலும், பொதுமக்களே பெரியளவில் கொல்லப்பட்டனர்.....

...20 ஆயிரம் படையினரைப் பயன்படுத்தி பெரிய எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்மூலம் 5. ச. கி. மீ. பகுதியையே கைப்பற்ற முடிந்துள்ளது. இந்த நிலையில் 950 ச. கி. மீ. பரப்பளவுள்ள யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற எவ்வளவு படைகள் தேவை?''

- ராவய பத்திரிகை 'அரசியல் அரங்கு' பகுதியில்.
'ஈழநாதம்' - 02. 08. 1995

❋ ''வடக்கு - கிழக்கு இணைந்தால் நிச்சயம் ஈழ இராச்சியம் உருவாகும். சமஷ்டி முறையிலான ஆட்சியும் ஈழ இராச்சியத்தின் ஒரு அங்கமே. எனவேதான் மக்கள் ஐக்கிய முன்னணி இவைகளை வன்மையாக எதிர்க்கின்றது.''

- தினேஷ் குணவர்த்தன
'வீரகேசரி' - 20. 07. 1995



❋ ''எமது நாட்டில் சிறுபான்மையின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் சிறுபான்மையின மக்களை அடிமைப்படுத்த எமது தலைவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பிரதிபலனே நாம் இன்று எதிர்நோக்கும் பாரிய யுத்தமாகும்.''

- பேராசிரியர் ஏ. வி. சுரவீர
(கலாசார மதவிவகார பிரதி அமைச்சர்)
'தினகரன்' 29.07.1995

❋ ''யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. தாமரையின் 'வெண்மை நிறம்'. நாம் ஈடுபட்டிருக்கிற யுத்தத்தின் 'தூய்மையைக் குறிக்கிறது. 'வெண்தாமரை இயக்கம்' அரசியல் நோக்குடன் கூடிய திட்டமல்ல''

- பேர்ட்டி பிரேமலால் திசநாயக்க
(கைத்தொழில் அபிவிருத்திக்கான துணை அமைச்சர்)
'டெய்லி நியூஸ்' - 31. 07. 1995

''ஒரு இலட்சம் பேரைக்கொண்ட இலங்கை இராணுவத்தால், 10 ஆயிரம் பேரைக்கொண்ட புலிகள் இயக்கத்தை ஏன் நசுக்கமுடியவில்லை என்று சிலர் கேட்கலாம். எண்ணிக்கை விபரங்களின் அடிப்படையில் இந்தப் போரை வெற்றிகொள்ள முடியாது.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் போராளிகளை புலிகள் அனுப்பும் விதம், உலகில் வேறு எங்கும் இல்லாத ஒன்று. அவர்களை இலகுவில் தோற்கடிக்க முடியாது.

...இராணுவத்தில் நான் ஒரு கப்டனாக இருந்தபோது, இந்தப் போர் ஆரம்பித்தது; நான் இப்போது ஒரு பிரிகேடியர். ஆனால் போர் இன்னும் தொடரவே செய்கிறது.''

- பிரிகேடியர் சரத் முனசிங்க
'உதயன்' - 08.08.1995

❋ ''விடுதலைப் புலிகள் வேறு உலகிலிருந்து வந்தவர்கள் அல்ல; அவர்கள் வடக்கு - கிழக்கு மக்களின் சொந்தப் பிள்ளைகள்; அவர்களின் மகன்மாரும் மகள்மாருமே அவர்கள். அவர்களை மக்களிடமிருந்து பிரிக்க முடியாது.''

- வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேல்
பி. பி. சி. நேர்காணலில் (09. 08.1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ எமது அரசுக்கோ, வேறுஎந்த அரசுகளுக்கோ வடபகுதியில் நிர்வாகம் செலுத்த முடியவில்லை. அங்கு நீதிமன்ற நிர்வாகத்தைக்கூட புலிகளே நடத்துகின்றனர்

யாழ்ப்பாணத்தில் உள்ளோர் தெற்கே வரவேண்டுமாயினும், அவர்கள் விஸா பெற்றே வரவேண்டும்.

ஆகவே. வடபகுதி தற்போது தனிநாடாகவே செயற்பட்டு வருகிறது.



புலிகளைத் தோற்கடிப்பதாயின், தமிழ் மக்களிடமிருந்து புலிகளைப் பிரிக்கவேண்டும்; அதற்காகவே இந்தத் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.’’

- அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

‘ ரூபவாஹினியில ’ - 13. 08. 1995

❀ ‘‘ பத்துப் பதினைந்து மைல்களுக்கு அப்பாலிருந்து ஷெல்லை ஏவுகிறார்கள். என்ன நோக்கமென்று சொன்னால் விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டுமாம். ஆனால் இத்தனை காலமும் இத் தாக்குதலுக்கு எத்தனை விடுதலைப் புலிகள் இறந்திருக்கிறார்கள்? ஒன்று இரண்டாக இருக்கலாம். ஆனால். ஆயுதம் தாங்காத சாதாரண பொதுமக்கள் - குடிமக்கள் எத்தனையோ பேர் இறந்துவிட்டார்கள்.

இந்தப் போர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரல்ல; சாதாரண மக்களுக்கு எதிரான போர் ஆகும். அரசின் இராணுவத் தாக்குதல்களுக்கு என்ன அர்த்தம் இருக்கிறது? சமைத்துக்கொண்டிருப்பவர்கள், கதிரையில் இருப்பவர்கள், சைக்கிளில் சென்றுகொண்டிருப்பவர்கள் குண்டுவீச்சினால் பலியாகிறார்கள்.’’

- அருட் திரு. ஜெபநேசன்

‘ ஈழநாதம் ’ - 10.80.1995



❀ ‘‘ நவாலி தேவாலயம் மீதான குண்டுவீச்சு சம்பவம் குறித்து என்னிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லையென நீங்கள் குறிப்பிட்டுள்ளது குறித்து, நான் ஆச்சரியம் அடைகிறேன்.

...இச் சம்பவம் குறித்து நான் ஜுலை 10ஆம் திகதி எழுதிய கடிதத்தை மறுநாள், உங்களுக்கு அனுப்புவதற்காக, அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைத்தேன்.

குடாநாட்டில் தொடர்ந்து அரச படைகள் நடத்தும் தாக்குதல்களால் பொதுமக்கள் பலியாவதுடன், அவர்கள் அரசுமீது வெறுப்புக்கொள்ளவும் வைக்கிறது. இராணுவத்தீர்வை விடுத்து அரசியல்ரீதியான தீர்வுக்கு முயற்சிக்குமாறு, உங்களை மீண்டும் நான் கோருகின்றேன்.’’

- யாழ். ஆயர் அதி. வண. தோமஸ சௌந்தரநாயகம்

( ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதிய கடிதத்தில்)

‘ ஈழநாதம் ’ - 09. 08. 1995

❀ ‘‘இன்று சிறீலங்கா அரசு எதைக் கூறிக்கொண்டாலும், தமிழர் தாயக மண்ணில், தமிழீழத் தேசியக் கொடியின் கீழ், தேசியத் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தின் கீழ் இருந்து, விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் சிங்களத் தேசத்தின் பிரதி நிதிகள் பேச்சுக்களை நடத்தியதை எவரும் மறுக்க முடியாது. இது, தமிழ் மக்களுக்கு விடுதலைப் புலிகள். பல நூற்றாண்டு வரலாற்றின் பின் பெற்றுக்கொடுத்த கௌரவமாகும்.’’

- ஆசிரியர் தலையங்கம்

‘ ஈழநாதம் ’ - 09. 08. 1995

❀ ‘‘ அரசியல் தீர்வின்மூலம் இப் பிரச்சினையைந் தீர்க்க முடியாது; யுத்தத்தின்மூலமே தீர்க்க வேண்டும். தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. நாட்டில் உண்மையான யுத்தம் நடைபெறுமாயின் நானும் எனது பிள்ளைகளும் தமிழர்களுக்கு எதிராக இராணுவத்தில் இணைந்து, ஆயுதம் தாங்கிப் போராடத் தயாராக இருக்கிறோம். தென்பகுதி முற்றாக யுத்தமயப்படுத்தப்பட வேண்டும்' இதற்காக கட்டாய இராணுவ சேவையை சகல சிங்கள பௌத்தர்களுக்கு வழங்கவேண்டும்.’’

- கலாநிதி நளின் டீ சில்வா

( இலண்டனில் )

‘ ஈழநாதம் ’ - 06. 08. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ ''...கண் மூடித்தனமான குண்டு வீச்சுக்களினாலும் தாக்குதல்களினாலும் தமிழர்களின் வெறுப்பைச் சம்பாதித்திருக்கும் வேளையில், இனப்பிரச்சினைக்கான உத்தேசத் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படுகிறது. இது தமிழர்களையும் சர்வதேச சமூகத்தினரையும் சாந்தப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே, தமிழர்களின் தலை மீது அடித்து, அவர்களின் முதுகில் உதைத்துவிட்டு எதனைக் கொடுத்தாலும் அதனை அவர்கள் அகதி முகாம்களில் இருந்தவாறே ஏற்றுக்கொள்வார்கள் என்ற எண்ணத்துடனா, இந்தத் தீர்வு யோசனை சமர்ப்பிக்கப்படுகிறது?''



- குமார் பொன்னம்பலம்

'உதயன்' - 02, 08. 1995

✻ '' விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிப்பதன்மூலம் புலிகளை அழிக்கமுடியுமென (ஜனாதிபதி) எண்ணுகிறார். இது ஒருபோதும் நடைபெறமுடியாத விடயம். தமிழ் மக்கள் இருக்கும்வரை விடுதலைப் புலிகள் இருப்பார்கள். இதுவே உண்மை. இது, தென்னாபிரிக்காவில் டி. கிளார்க் எடுத்த முயற்சி போன்றது. ஆபிரிக்க தேசிய கொங்கிரசை கறுப்பின மக்களிடமிருந்து ஒதுக்க முற்படுவது போன்றது.'' இஸ்ரேல், பி. எல். ஓவை பலஸ்தீன மக்களிடமிருந்து ஒதுக்க முற்படுவது போன்றது.

- ம. வசந்தராஜா

(முன்னாள், ரூபவாஹினி'த் தலைவர்-
பி. பி. சி. சிங்கள சேவையில்)

'ஈழநாதம்' - 06. 08. 1995

✻ '' ஈழத் தமிழர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். பாகிஸ்தானிடமிருந்தும் உலகின் பல நாடுகளிடமிருந்தும் இலங்கை அரசு பெருமளவு ஆயுதங்கள்



வாங்குகிறது. இச்சூழலில் சிங்கள அரசுக்கு இந்தியா எந்த விதத்திலும் உதவக் கூடாது.''

- வை. கோபாலசாமி

(ம. தி. மு. க. தலைவர்-
இந்திய ஜனாதிபதியிடம் கோரிக்கை)

✻ ''வலிகாமம் பகுதியில், அண்மையில் சிறீலங்கா இராணுவத்தினரால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அநியாயச் சாவுகள் இனிமேல் எமக்கும் ஏற்படலாம். எனவே, இதைத் தடுத்து, எமது சாவுக்கு அர்த்தம் கொடுக்க வேண்டும். இதனூடாகவே எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க முடியும். இவ்வாறு எமது பிள்ளைகள் கூறியதை மனப்பூர்வமாக ஏற்றே, அவர்களை நாம் போராட்டத்தில் இணைத்துள்ளோம்.''

- டொக்ரர் எஸ். சுந்தரலிங்கம் தம்பதி

(தமது இரண்டு பிள்ளைகளைப் போராட்டத்தில்
இணைத்தமை பற்றி)

'ஈழநாதம்' - 12. 08. 1995

✻ '' ஈழத்தில் நடந்துவரும் போரில், தமிழினப் படுகொலைக்கு சிங்கள இராணுவத்துக்கு உதவும் வகையில் பாகிஸ்தான் ஆயுத உதவி வழங்குகின்றது.

இந்தியாவும் தன் பங்கிற்கு ஈழத் தமிழர்களைக் கொல்லவும், தமிழக மீனவர்களைக் கொல்லவும், சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி மற்றும் நவீன ஆயுதங்களை வழங்கி வருகிறது.

ஈழத் தமிழர்கள் அநாதைகள் அல்ல என்பதை மத்திய அரசுக்கும் சிங்கள அரசுக்கும் எமது கட்சியின் சார்பில் தெரிவித்து, அந்த அரசுகளுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன்.''

- பேராசிரியர் தீரன்

(தலைவர் - 'பாட்டாளி மக்கள் கட்சி')

✻ '' யாழ்ப்பாணம் வெளியுலகத்திலிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டு, ஒரு சிறைக்கூடம் போலுள்ளது.

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் இரவில் பாலங்களைத் தேடிச் சென்று பாதுகாப்புத் தேடுகிறார்கள். நாடோடிகள் போல யாழ்ப்பாண மக்கள் இப்போது அகதிகளாகத் திரிகிறார்கள்.''

- அருட் திரு. எஸ். ஜே. இம்மானுவேல்

பி. பி. சி. - 11. 08. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ "கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். சட்டம் - ஒழுங்கைப் பேணுதல், அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றுக்குத் தேவையான சகல வாய்ப்புகளையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

எனவே அதிகாரப் பகிர்வுப் பொறுப்பினை விடுதலைப் புலிகளின் பொறுப்பில் விடுவதே நிருவாகத்திற்கான இலக்காக அமையும்."



- அமைச்சர் எஸ். தொண்டமான்
( ஜனாதிபதிக்குத் தெரிவித்த ஆலோசனைகளில் )
'வீரகேசரி' - 04. 08. 1995

❋ "1960 களில், யாழ்ப்பாணத்தில், தமிழர்களுடன் சேர்ந்து நான் பத்துப் பாடசாலைகளை அமைத்தேன். இவற்றின் பெயர்கள் 'மடிகே பன்னசீஹ வித்யாலய', 'அமுனுகம சிறீ விபாஸி வித்யாலய', 'ஆனந்த சீமஹே வித்யாலய', எல். எச். மெத்தானந்த வித்யாலய' என்றவாறு செல்கின்றன.

இப் பாடசாலைகளைத் தமிழ்ப் பிள்ளைகளுக்காக, தமிழ்ப் பிரதேசங்களில் அமைத்தோம்; அத்தோடு அவற்றுக்கு நாம் சூட்டிய பெயர்கள் சிங்கள - பௌத்த தலைவர்களுடையதாகும்.

இன்று இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பதாகச் சொல்லுபவர்கள். அன்று எங்கே சென்றிருந்தார்கள்?

- ஏ. ரி. ஆரியரத்ன
('சர்வோதய' இயக்கத் தலைவர் - நேர்காணலில்)
'சண்டே ஒப்சேவர்' - 30. 07. 1995



❋ "இன்று நாட்டில் எதை எடுத்துக்கொண்டாலும், இன ரீதியாகவே வியாக்கியானம் தரப்படுகின்றது. சில சிங்களப் பத்திரிகைகள் மிகவும் மோசமான வகுப்புவாத பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. சகல மக்களுக்கும் அவர்களுடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இவையெல்லாம் யுத்தத்தால் முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய விடயங்கள் அல்ல."

- ஸ்ரீபன்
( கொழும்பு மாநகரசபை உறுப்பினர் )
'வீரகேசரி' - 30. 08.1995

"ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் சகலதையும் மீறியதன்மூலமாக, சகல சமூகங்களையும் சேர்ந்த தொழிலாளர்களினதும் இளைஞர்களினதும் எதிர்ப்பைச் சம்பாதித்திருக்கின்றார். இப்போது அவர் விநோதமான அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுடன் மக்கள் முன்வர முயல்கிறார்.

தெரிவுக் குழுவின் ஊடாகவும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாகவும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணக்கூடிய அரசியலமைப்பு மாற்றங்களைக் கொண்டு வருவது சாத்தியமில்லை."

- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன
( நவ சம சமாஜக் கட்சியின் அரசியற்குழு - சார்பில் விடுத்த அறிக்கையில் )
'வீரகேசரி' - 02. 08. 1995

❋ பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையைச் சந்திக்க பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்றுக் காலை சென்ற ஈ. பி. டி. பி. எம்பிக்கள் மூவர், அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் அவமதிக்கப்பட்டனராம். இதனை ஆட்சேபித்த அவர்கள் அமைச்சரைச் சந்திக்காமலே திரும்பிவிட்டனர்.

- செய்தி
'வீரகேசரி' - 05. 08. 1995

❋ "ஈழம் கோரும் விடுதலைப் புலிகளுக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்குவதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒரே குறிக்கோளாக உள்ளது. சமாதானத்திற்கு எதிராகச் செயற்படும் இத்தச் சங்கத்தினரை நாட்டிலிருந்து துரத்திவிட வேண்டும்."

- சந்துர கருணாரத்ன
( மாத்தறை நகரசபை. சி. ல சு. க. உறுப்பினர்)
'வீரகேசரி' - 05. 08. 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ '' இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மூன்று முனைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மூன்று முனைகளிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான் அரசின் திட்டமாகும்.''

- அனுருத்த ரத்வத்தை
(அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் - நாடாளுமன்றத்தில் )



❋ '' தமிழர்களுக்கென தனியானதோர் பிரச்சினை நாட்டில் இல்லை.மாறாக, அனைவருக்கும் பொதுவான சில பிரச்சினைகள் மட்டுமே உள்ளன.''

- மாதுளுவாவே சோபித தேரோ
( கோட்டே ஸ்ரீ நாக விகாராதிபதி)
'வீரகேசரி' - 08. 08. 1995

❋ '' இலங்கையில் இனவாதப் போருக்கு எதிராகப் பிரசாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய அதிபர் சந்திரிகாவின் உண்மை வேடம் கலைந்துவிட்டது. உண்மைச் சாயம் வெளுத்துவிட்டது.

ஜனநாயகம், மனிதாபிமானம், இன சமத்துவம் என்று தான் அணிந்த முகமூடிகளைச் சந்திரிகா அம்மையார் தானே கழற்றி எறிந்துவிட்டார். ''

- வெரித்தாஸ் வானொலி
12. 08. 1995

❋ '' சிறீலங்கா அரசின் தமிழ் இனப் படுகொலை நடவடிக்கைகளைக் கண்டித்தும் அதை நிறுத்தக் கோரியும் - தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கோரிக்கையை அங்கீகரிக்கக் கோரியும் - சுவிஸ் தலைநகர் ஜெனீவாவில் இன்று பிரமாண்டமான பேரணி ஒன்று ஐ. நா. அலுவலகம் முன்பாக நடத்தப்பட்டது. சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, கத்தோலிக்க ஆன்மீக பணியகம், சைவத் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக ஏற்பாடு செய்த இந்தப் பேரணியில், சுமார் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் பங்குபற்றினர்.''

பி. பி. சி. தமிழோசை
14. 08. 1995

❋ '' வடமராட்சி கடற்பகுதியிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி, கடந்த புதன்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களினால் ஏழு பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள், வைத்தியசாலைகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் பலத்த சேதமடைந்தன. 'வீரயா' தாய்க்கப்பலும், மூன்று தரையிறக்கும் கப்பல்களும், பதினைந்து கடற்படைப் படகுகளும் காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் இத் தாக்குதல்களை மேற்கொண்டன; சுமார் இரண்டு மணிநேரம் இது நீடித்தது.

கடற்படையினரின் கடும் தாக்குதலின்போதும் வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் க. பொ. த. ( உயர்தர ) பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.''

- செய்தி
'வீரகேசரி' 09. 08. 1995

❋ ''புலிகளுக்கெதிரான யுத்தத்திற்காக, ஒவ்வொரு நிமிடமும் 41,000 ரூபாவை தேசிய நிதியிலிருந்து செலவளிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக நலன்புரி சேவைகளுக்குரிய தொகையினை, ஒவ்வொரு வருடமும் குறைக்க வேண்டி நேரிடுகிறது.''

- அமைச்சர் மங்கள சமரவீர
'ஐலண்ட்' - 07.08.1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ''இன நெருக்கடிக்கு தீர்வுகாணும் முயற்சியிலே வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எதிர்க்கவே செய்கிறது. வடக்கு - கிழக்கின் தற்போதைய எல்லைகள் எந்தவிதமான திட்டவட்டமான நோக்கமும் இன்றி காலனித்துவ காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவையாகும்.



... தமிழர்களுக்கென தனியான தாயகம் ஒன்றை வழங்கும் கோட்பாட்டை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. ஒவ்வொரு பிராந்தியத்திலும் வாழும் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களாகவே தீர்த்துக்கொள்வதற்கு வகை செய்வதே அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் பின்னணியில் உள்ள நோக்கமாகும். வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு, இந்த அரசாங்கத்துக்கு எந்தவொரு ஆணையுமே கிடையாது.''

- ஜி. எல். பீரிஸ்

(நீதி அமைச்சர்)

'வீரகேசரி' - 09 .08. 1995

❋ ''முழு இலங்கைத் தீவுக்கும் பிரதேசரீதியாக அதிகாரப் பரவலாக்கம் வழங்கும் யோசனைகளைக் கொண்ட உத்தேசத் திட்டமொன்றை சந்திரிகா அரசு அறிவித்திருக்கிறது.

இந்த யோசனைகள் தமிழர் தாயகத்தில் வதியும் தமிழ் மக்களுக்கோ, அன்றி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் விடுதலைப் புலிகளுக்கோ முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்த யோசனைகளின் தகைமை பற்றியோ, அவற்றின் சாதக பாதக அம்சங்கள் பற்றியோ நாம் கருத்துத் தெரிவிப்பதில் அர்த்தமில்லை.



இந்த அரசியல் யோசனைகள் என்பது - இராணுவத் தீர்வை நியாயப்படுத்துவதற்காகப் போடப்பட்ட ஒரு ஏமாற்று முகமூடியன்றி வேறொன்றுமல்ல.

.. அன்றும் சரி இன்றும் சரி, இராணுவத் தீர்விலேயே அரசாங்கம் நம்பிக்கை வைத்திருக்கிறது. இராணுவரீதியாகப் புலிகளை அழித்துவிட்டால், தான் விரும்பியவாறு ஏதாவதொரு அரைகுறையான தீர்வுத்திட்டத்தைத் தமிழ் மக்கள் மீது திணித்துவிடலாம் என சந்திரிகா அரசு எண்ணுகிறது போலும்!

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வென்றும், விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தீர்வென்றும் ஒரு கேலிக்கூத்தான அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறது.

அதிகாரப் பரவலாக்கம் என்ற மாயையைக் காட்டி, தமிழ் மக்களுக்கு ஒரு போலியான நம்பிக்கையைக் கொடுத்து, புலிகளையும் மக்களையும் பிளவுபடுத்திவிடலாமென அரசாங்கம் கனவு காண்கிறது.''

- கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(செய்தியாளர் மாநாட்டில்)

'ஈழநாதம்' - 12. 08. 1995

❋ சென்ற மாதம் வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் 234 பேர் கொல்லப்பட்டனர்; 1414 பேர் காயப்பட்டனர் என, யாழ். அரச அதிபர் தெரிவிக்கிறார். அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈட்டினையும் எதிர்பார்க்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த மூன்று மாதங்களாக தபால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

- செய்தி

'ஐலண்ட்' - 03.08.1995

❋ 'யாழ். குடாநாட்டு மக்களுக்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் கையிருப்பில் உள்ளதென்பதை அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்' என 26.07.1995 மாலை இலங்கை வானொலியில் ஒலிபரப்பான செய்தி உண்மைக்குப் புறம்பானது என, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு எழுதிய கடிதமொன்றில், யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

- செய்தி

'வீரகேசரி' - 03.08.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ''இந்த ஆலோசனைகள் நாளைக்கே நடைமுறைப்படுத்தப்படப் போவதில்லை, அவை ஆலோசனைகள் மட்டுமே; சட்டங்களல்ல. நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பு திருத்தங்களுடன் அவை அரசியல் யாப்பில் சேர்க்கப்பட வேண்டும். அந்நேரத்தில் வடக்கு கிழக்கு நிலைமைகளில் இராணுவ ரீதியில் மாற்றங்களும் நிகழக் கூடும்.''

- ஜனாதிபதி சந்திரிகா
'ஐலண்ட்' - 05. 08. 1995



❋ ''பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கீழும், கடந்த சில வாரங்களாக, உருச்சிதைந்த சடலங்கள் ஆறுகளிலும் ஓடைகளிலும் மிதக்கின்றன. இச் சடலங்கள் இந்நாட்டுக் குடிமக்களுடையவை என்பதில் சந்தேகமில்லை.

...இக் கொலைகளைச் செய்தவர்களை அடையாளங்காட்டுவது எமது கடமை. அவர்கள், ஐ.தே.க ஆட்சியில் 'பிறா' என அடையாளங் காணப்பட்ட கொலைகாரக் குழுவில் இருந்த - சில குறிப்பிட்ட 'தமிழீழக் குழுக்களின்' உறுப்பினர்களும் தலைவர்களும் ஆவர்.''

- ஜனதா விமுக்தி பெரமுன
( தனது அறிக்கையில்)
'ஐல்ண்ட்' - 27. 07. 1995

❋ மேற்குலகைச் சேர்ந்த வட்டாரங்கள் மண்டைதீவுத் தாக்குதல் ( 28 ஜூன் - 95 ) பற்றி இவ்வாறு சொல்கின்றன: ''இராணுவததுக்குப் பெரிய அடி கிடைத்துள்ளது. இவ் வருடத்தில் யுத்தத்தில் தாங்கள் வென்றுவிடுவதாக அவர்கள் சொல்வதை நம்புவது கடினம். 13 வருடங்களாக அவர்களால் வெல்ல முடியவில்லை; இப்போதுமட்டும் அவர்களால் எப்படி முடியும்?''

- ராய்ட்டர்
'ஐலண்ட்' - 01. 07. 1995




# புத்தி உங்களிடம்!
# சித்தி தரும் நூல்கள் எம்மிடம். ஆம்...

- பாட நூல்கள்
- அறிவியல் நூல்கள்
- இலக்கியப் பொக்கிசங்கள்
- வரலாற்று நூல்கள்
- தமிழீழப் போராட்ட எழுச்சிமிகு வெளியீடுகள்

இன்னும் இன்னும்
பள்ளிச்சிறார்கள் முதல் பல்கலைக்கழக மாணவர் வரைக்குமான உபகரணங்கள் அத்தனைக்கும்

**யாழ்ப்பாணத்தில் ஒரே இடம்**

# தமிழ்த்தாய் பொத்தக நிலையம்

(பழைய பஸ்நிலைய முன்றல்)
**191, லெப். கேணல் இராசன் சாலை,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிக விரைவில்...
## உங்கள் கைகளில்...

முன்னேறிப் பாய்ந்த அரசபடைகளின்
மூர்க்கத்தனங்கள்......

''அமைதிகாக்க'' போர்தொடுத்தவர்களின்
அராஜகச் செயல்கள்

கொலைக்களத்தில் உறவுகளை இழந்தோர்
கூறிய கண்ணீர்க் கதைகள்

*நவாலிச் சம்பவங்கள் உட்பட 1995 ஜூலையில்*
*அரசு நிகழ்த்திய அநியாயக் கொலைகளை*
*ஆவணப்படுத்தி வழங்கும்*

நாவண்ணனின் புதிய முயற்சி

## தமிழ்த்தாய் வெளியீட்டகத்தின் மற்றுமொரு வெளியீடு!

# ''எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன''

-தமிழ்த்தாய் வெளியீட்டகம்

மாறன் பதிப்பகம் 664, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org